★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ✡ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 6உ. திங்கள் (22—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 7உ. செவ்வாய் (23—10—56) [இதழ் 114

60-இலட்சம் டன் இரும்புக் கனி!

ஜப்பானுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யுமாம்

டோக்கியோ, அக். 20—

1957-ல் 15 இலட்சம் டன்; 1958-ல் 20 இலட்சம் டன்; 1959-ல் 25 இலட்சம் டன்—ஆக மொத்தம் 60 டன் இரும்புக் கனிப்பொருளை ஜப்பானுக்கு ஏற்றுமதிசெய்ய இந்திய சர்க்கார் சம்மதித்திருப்பதாகவும், இதற்கான நீண்டகால ஒப்பந்தம் ஒன்று ஜப்பானிய ஆலைகளுடன் சீக்கிரமே மேற்கொள்ளப்படும் என்றும் ஜப்பான் ஆலை முதலாளி ஒருவர் தெரிவித்திருக்கிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

சங்கரலிங்கனார் மறைவு:

சென்னையில் தமிழர் போர்க்கோலம்

உயிர் ஈந்த உத்தமருக்கு வீரவணக்கம்

'தமிழ் நாடு எனப் பெயர் அமையப் பாடுபடுவோம்'

கடற்கரையில் சர்வ கட்சியினர் சங்கநாதம்

சென்னை, அக். 21—

" 'சென்னை மாநிலம்' என்று அழைக்கப்படும் இந்தத் தமிழகத்திற்குப் புதிய மாநில அமைப்புப்படி 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும்.

"தியாகி சங்கரலிங்கம் 76 நாட்கள் உண்ணு நோன்பு மேற்கொண்டு உயரிய சில கொள்கைகளுக்காக உயிர் நீத்தமைக்கு இந்தக் கூட்டம் வருந்துவதுடன், அவரது உறவினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறது.

"இன்றைய ஆட்சியின் போக்கைக் கண்டிக்கும் வகையிலும், இந்தநாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடவேண்டியும் எல்லா கட்சிகளும் ஒன்றுகூடி பாடுபட வேண்டும் என்று இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது."

மேற்கண்ட இந்த மூன்று தீர்மானங்களும், சங்கரலிங்கனார் மறைவுக்காக சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்றக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஊர்வலம்:

சென்னை துறைமுகப் பகுதியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த தொண்டர்கள் தங்கள் கொடிகளுடன் ஊர்வலமாகப் புறப்பட்டு, கூட்டம் நடைபெற்ற இடத்தை வந்தடைந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த எச். டி. இராஜா அவர்கள் பேசுகையில், 'உலக சரித்திரத்திலேயே சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதம் ஈடு இணையில்லாதது' என்றும், 'அவர் செய்தது மகத்தான தியாகம்' என்றும் குறிப்பிட்டார்

"இந்த அரசாங்கம் தன் கடமையைச் செய்திருந்தால் அவர் சாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்காது; அவர் இறந்துவிட்டார்; என்றாலும் அவர் மேற்கொண்ட உண்ணா நோன்பின் அடிப்படை வெற்றி பெற்றே தீரும்; நிச்சயம் இந்த எதேச்சாதிகார ஆட்சி அழியும்; அவர் மறைவு இன்றைய ஆட்சிக்குச் சாவுமணியடித்தே தீரும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

எஸ். ஏ. ரகீம்

அடுத்துப் பேசிய எஸ். ஏ. ரகீம் 'இன்றையக் காங்கிரஸ் பணம் ஒன்றுக்குத்தான் மதிப்புத் தருகிறதேயல்லாமல் தியாகத்தையோ, திறமையையோ மதிப்பதில்லை. காந்தியார் கூறியதைப்போல் அவர்கள் காங்கிரசைக் கலைத்திருக்கவேண்டும். ஆனால், அதைச் செய்யாமல் காங்கிரஸ் பெயரால் பெரும் வியாபாரம் நடத்தும் பேர்வழிகள் அடங்கியக் காங்கிரசைப் புரிந்துகொள்ள ஒரு வழிகாட்டியாகச் சங்கரலிங்கனார் அமைந்துவிட்டார்' என்றார்.

கே. விநாயகம்

அடுத்துத் தோழர் கே. விநாயகம் பேசுகையில், 'சங்கரலிங்கனாரின் கோரிக்கைகள் அனைத்தும் நியாயமானவை; இருந்தும், இந்த அரசாங்கத்தின் சண்டித்தனமும், இறுமாப்பும் இந்தக் கோளாறினை உருவாக்கியுள்ளது,' என்று குறிப்பிட்டு, ஆட்சியாளரைக் கண்டித்துப் பேசினார்.

பி. இராமமூர்த்தி

தோழர் பி. இராமமூர்த்தி பேசுகையில் சொன்னார்:—

"மறைந்த சங்கரலிங்கனார், பலமுறை சிறை சென்றுள்ளார்; ஆனால் அவர், ஒருமுறைகூடப் பதவிக்காக ஆசைப்பட்டதில்லை. அவர் பண்டைய தேசியப் பாரம்பரியத்தின் பிரதிநிதி; தன்னலமற்றத் தியாகி; கைம்மாறு எதிர்பாராத உத்தமர்; பண்கைக் கேட்காதவர்; மோசமான எண்ணம் இல்லாதவர். அவரைப் போன்றவர்கள் இன்று காங்கிரசில் இல்லை. என்னதான் பண்டித நேரு பாடுபட்டாலும், மீண்டும் இந்தக் காங்கிரசை ஒன்றுபடுத்த முடியாது.

"மக்கள்மீது அடக்குமுறையை ஆட்சியாளர் பிரயோகித்து வருவதும், இயக்கங்களை ஒடுக்க முயற்சிப்பதும் கேவலமாகும்.

"ஆட்சியாளரைக் கண்டிக்க வேண்டும் என்றால், அது, சட்டசபையில் முடியாத காரியம்; இம்மாதிரியான வெகுஜனப் போராட்டத்தின் மூலமேதான் முடியும். எனவே, ஆட்சிக்கு எதிரிடையாக எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்."

எஸ். இராமநாதன்

அடுத்துப் பேசிய தோழர் எஸ். இராமநாதன் கூறியதாவது:—

'சங்கரலிங்கனாரின் மறைவு, காந்தீயத்திற்குச் சாவு; காங்கிரசுக்குச் சேவுவம். காங்கிரசார், இன்று காந்தியாரின் கொள்கைகளை மறந்துவிட்டார்கள். பொட்டி சீராமுலு இறந்த பின், அவருடைய கோரிக்கைகளைப் பலாத்காரத்தின் மூலம் ஆந்திரர்கள் அடைந்தனர்; ஆனால் அத்தகைய செயலில் தமிழர்கள் ஈடுபடவில்லை. நாம் பலாத்காரமற்ற முறையில், அமைதியாக சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்."

கா. மு. ஷெரீப்:

அடுத்து தோழர் கா. மு. ஷெரீப் பேசுகையில், 'சங்கரலிங்கனாரின் மறைவிற்கு இன்றைய ஆட்சியே காரணம்' என்று கூறி, 'அத்தகைய ஆட்சியை ஒழித்துக் கட்ட எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அருணாசலம்:

அடுத்துப்பேசிய தோழர் அருணாசலம், இன்றைய ஆட்சியாளரின் 'பாசிசப்' போக்கைக் கண்டித்துப்பேசினார். 'அத்தகைய ஆட்சியை முறியடிக்க எல்லோரும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

காஞ்சி-கல்யாணசுந்தரம்:

அடுத்துப்பேசிய தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் சங்கரலிங்கம் உண்ணாவிரதம் இருந்தது பெரிய வீரமல்ல என்று சிலர் கருதுவதைக் கண்டித்து வெறும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மார்பைக் காட்டுவதுதான் வீரம் என்று கருதுவதை அம்பலப்படுத்தினார்

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"மறைந்த சங்கரலிங்கனார் தாம் செத்துவிடலாம் என்று தெரிந்தும்கூட, 'சாவே வா! சாவே வா!' என்று அழைத்து வீரச்சாவைக் கட்டித் தழுவினார்; இது வீரமில்லையா?

"காமராசர் இந்த விஷயத்தில் அலட்சியமாக இருந்தது மிகவும் கண்டிக்கத் தக்கது. ஒரே கட்சிக்காரர்—ஒரே ஊரைச் சேர்ந்தவர்—இதெல்லாம் தொலையட்டும்; மனிதப்பண்பாவது அவருக்கு இருக்கவேண்டாமா? சங்கரலிங்கனாரைச் சந்தித்திருக்கலாமே? ஆறுதல் கூறியிருக்கலாமே? மொரார்ஜி தேசாய் பட்டினியிருக்கிறார் என்றவுடன் நேரு பண்டிதர் பதைபதைத்தார். ஆனால் சங்கரலிங்கம் பட்டினியிருந்ததற்கு நேருதான் கவலைப்படவில்லை — காமராசராகிலும் கவலைப்பட்டிருக்க வேண்டாமா? இம்மாதிரிச் சூழ்நிலையை மேலும் நாம் வளரவிடக்கூடாது. அந்நிலையைப் போக்க மற்ற கட்சிகளுடன் ஒன்றுபட்டுப் பணிபுரிய தி. மு. கழகம் எப்போதும் தயாராக உள்ளது."

ஜி. உமாபதி:

அடுத்துப்பேசிய தோழர் ஜி. உமாபதி, 'இன்றைய தமிழர்கள் கட்சி வேறுபாடின்றித் தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் மக்களுக்காகவும் பாடுபட முன்வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

க. அன்பழகன்:

அடுத்துப்பேசிய தோழர் க. அன்பழகன், சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை விரிவாக விளக்கிப்பேசினார்.

"அவர் இறந்த பின் யாருக்கு நாம் அனுதாபம் தெரிவிப்பது? அதனால் என்ன பயன்? உண்மையில் நாம் சங்கரலிங்கனாருக்கு அனுதாபம்தெரிவிப்பதனால் அவருடைய மறைவின்மூலம் இந்த நாட்டில் பெரிய எழுச்சி ஏற்பட வேண்டும்.

"இன்றைய ஆட்சி கேலிக்குரியதாகிவிட்டது. ஆட்சியின் பெயரைச் சொன்ன உடனே மக்களுக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இந்த ஆட்சியில் நாம், பெரிய தலைவர்களை இழந்திருக்கிறோம்; தொண்டர்களை இழந்திருக்கிறோம்; ஆனாலும், உள்ளப் பண்பாட்டால் நாம் பெரிய புரட்சியில் ஈடுபடவில்லை.

'78 நாட்கள் உண்ணா நோன்பு இருப்பது சாதாரணமல்ல. அவர் உள்ளத்திலே ஊசலாடிய எண்ணம்—அவர் சிந்தையிலே இடம் பெற்றிருந்த விஷயங்கள் யாவும், அவருக்கு உணவைப்பற்றி சிந்திக்கக்கூட அவகாசம் தரவில்லை.

"காங்கிரஸ்—அவர் வளர்த்த புனிதமான கட்சி! காந்தியாரின் கொள்கைகளைத் தூய்மையுடன் பேணி வளர்த்தவர் அவர்! ஆனால், இந்த ஆட்சியின் வெப்பத்தால் அவர் இறந்தார். பட்டினியால் இறந்துபடவில்லை; நல்லது செய்யாதார் ஆட்சியில் இன்னும் பல நாள் இருக்க விரும்பாமல் இறந்துவிட்டார். அவருடைய கோரிக்கைகள் மிகவும் சாதாரணமானவை; நல்லவர் ஏற்றுச் செய்யக்கூடியவை. அந்த கோரிக்கையில் ஒன்றிரண்டு ஒரு சில எதிர்க்கட்சிகளுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; அல்லது சிறு மாற்றத்தை விரும்பலாம். ஆனால் எந்தக் காங்கிரஸ்காரரும் அவருடைய கோரிக்கைகளை மறுக்கவோ, திருத்திக் கூறவோ இடமில்லை. காரணம், அவருடைய கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்கனவே காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டது—ஒப்புக்கொண்டது.

"வடநாட்டில் யார் 'தியாகம்' செய்தாலும், அது, அங்கு மதிக்கப்படுகிறது; ஆனால் தென்னாட்டில் யார் தியாகம் செய்தாலும் வடநாடு மதிப்பதில்லை.

"தேசீயத்திற்காகத் திரு. வி. க. பாடுபட்டார்—வடநாடு மதிக்கவில்லை;

"வ. உ. சி. உழைத்தார்; சிறையில் செக்கிழுத்தார்; இருந்தும் வடநாட்டவரால் கவனிக்கப்படவில்லை.

"திருப்பூர் குமரன் தடியடிபட்டார். வடநாட்டில் யாரும் போற்றினரில்லை. அவருக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பாராட்டுதல் கிடையாது.

"பம்பாய் தன் கையில் இருக்க வேண்டும் என்று மொரார்ஜி தேசாய் உண்ணாநோன்பு இருந்தார்; முடிவென்ன? 'நான் சாக வேண்டும் என்று மற்றவர்கள் விரும்புகின்றனர்—எதிர்பார்க்கின்றனர்; எனவே, நான் உண்ணாநோன்பைமுடித்துக்கொள்கிறேன்' என்றார் சங்கரலிங்கம் அப்படிப்பட்டவர் அல்லவே! தமிழனின் மானத்தைக் காக்க உரிமைகளை வலியுறுத்தி உயிரையே தந்தாரே! இந்தக் கேவலமான ஆட்சியில் உண்ணாநோன்பு வேண்டாம் என்று நமது அண்ணா அவர்கள் கூட அவரைச் சந்தித்து வற்புறுத்தினர். என்றாலுங்கூட அவர், 'நான் செத்தபிறகாவது இந்தக் காங்கிரஸ் சீர்படட்டும்' என்றார்,

(4-ம் பக்கம் பார்க்க)

ரஷ்ய 'ஆதிக்கத்'திற்கு எதிராக போலந்தில் போர்க்கொடி

சமத்துவ அடிப்படையில் உறவுகள் வேண்டுமென புதிய செயலாளர் கூவுகிறார்

"போலந்தின் ஆதிபத்திய உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வோம்; அதற்கு எங்களது ஆற்றலே போதுமானது; நாடு ஜனநாயகமாவதற்காக நாங்கள் பாடுபட்டு வருவதிலிருந்து துரத்தப்படாமலிருப்பதற்கு இந்தக் கூற்று—எச்சரிக்கை அவசியமாகிறது"

என்பதாக, போலந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது செயலாளராகப் பதவி ஏற்றிருக்கும் போலந்தின் 'டிட்டோ' என்று வர்ணிக்கப்படும் வ்ளாடிஸ்லாவ் கோமுல்கா என்பார், வார்சா கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் பேசியதாக வார்சா வானொலி அறிவித்துள்ளதாம்.

அவரது பேச்சு, 'ரஷ்யாவின் 'ஆதிக்க'த்திலிருந்து போலந்து விடுபட வேண்டும் என்ற நோக்கமுடையது' எனப் பார்வையாளர்கள் கூறுகின்றனராம்.

இவர் ஸ்டாலின் காலத்தில் சிறை வைக்கப்பட்டிருந்து, மாநாட்டிற்குப் போதுதான் விடுதலை பெற்று, கட்சித் தலைவர்களின் அணியில் மீண்டும் இடம் தரப்பட்டுள்ளவராம்.

'ரஷ்யாவுடன் நமது நட்புறவுகள், சமத்துவம், ஆதிபத்திய உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கவேண்டும்' என்று இவர் வலியுறுத்திப் பேசினாராம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை . 22-10—'56 திங்கள்

எதேச்சாதிகார எக்காளம்!

உருக்குத் தொழிற்சாலை துவங்க வேண்டும்; அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும்; அனைவருக்கும் வேலை வாய்ப்பளிக்க வேண்டும்; இப்பகுதி மக்களைப் பிடித்துள்ள இல்லாமையை விரட்டியடிக்க பல்வகைத் தொழில்களை நிறுவ வேண்டும்—என்றெல்லாம் நாம் மட்டும்தான் முழங்குவதாக மற்றவர் நினைத்துக் கொள்ளட்டும் என்ற கருத்தில், நமது கோரிக்கைகளைக் 'குறுகிய பாலையப் பற்று' எனக் கிண்டல் செய்து வருகின்றனர், பெரிய—சிறிய காங்கிரசுத் தலைவர்கள் அனைவரும். தொழில்கள் எங்கு நிர்மாணிக்கப்பட்டால் என்ன—அவைகளால் நமக்கும் இலாபம் உண்டு—சில பல தொழில்களை இப்பகுதியில்தான் நிர்மாணித்து ஆக வேண்டும் என எண்ணுவதே இந்திய தேசிய ஒற்றுமைக்கு ஊறு தேடுவதாகும்; அவ்வாறு கோருவோர் நாட்டுத் துரோகிகள் — மக்கள் விரோதிகள்; அவர்கள் மயக்க உரையில் மயங்கி விடாதீர் என்றெல்லாம் டில்லி சொல்லிக் கொடுத்ததை, இங்குள்ள காங்கிரசு எடுபிடிகள் அப்படியே எழுத்துக்கெழுத்து உச்சரிப்பு கெடாமல் வாந்தி எடுத்தும் வருகின்றன.

இவர்கள் விளக்கம் பெற, மனமருட்சி நீங்க, அசாம் மக்கள் கோரிவரும் ஒரு பிரச்சினையை எடுத்துக் காட்டுகிறோம். அதைக்கண்ட பிறகாவது இங்குள்ள காங்கிரசு ஏவலாளிகள், நம்மைக் குறித்து வசை பாடிவரும் வழக்கத்தைக் கைவிட முன்வருவதுடன், நமது கோரிக்கையில் உள்ளடங்கி இருக்கும் நியாயத்தைத் தெரிந்து கொள்ள முயலுமாறும் வேண்டிக் கொள்ளுகிறோம். நாம் வேண்டிக் கொள்ளுகிறபடி தங்களுடைய டில்லிக்குச் சரணம் கூறும் அடிமைப்புத்தியை, இங்குள்ள காங்கிரசுப் பதவி மோகிகள் விட்டுவிடுவர் என்பதை நாம் முழுதும் நம்பவில்லையானாலும், இன்னமும் பண்பு கெட்டுவிடாத காங்கிரசுக் கட்சியினர் இருக்கும் பட்சத்தில், அவர்களாவது உண்மையை உணர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பளிக்க வேண்டியது நமது கடமை என்ற எண்ணத்தில், அசாம் மக்களின் உள்ளக்கிடக்கையை இங்கு எடுத்துக்காட்ட முனைகிறோம்.

அசாம் மாகாணத்தில் பூமிக்கடியிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. அந்த எண்ணெயை வெளியில் எடுத்துச் சுத்தம் செய்ய அங்கேயே ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என அசாம் குடிமக்கள் கோருகின்றனர்.

அசாம் குடிமக்கள் கோரினாலும் கோராவிட்டாலும், எண்ணெய் கிடைக்கும் அப்பகுதியிலேயே எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை ஒன்றை நிர்மாணிப்பது, தொழில் துறையில் இலாபகரமானதாகும். இந்த உண்மையை எந்தப் பொருளாதார நியாயமும் மறுத்துக் கூறுது.

இருந்துவரும் நியாயப்படியும், மக்கள் விருப்பப்படியும் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றைத் தங்கள் பகுதியில் துவங்காதிருக்க ஏதோ தீவிரமாகச் சதி செய்து வருவதாக, டில்லி ஆதிபத்தியத்தின்மீது பலமான சந்தேகம் அசாம் மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதன் பலனாக, இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அங்கு சென்றிருந்தபொழுது அவர் முன்னிலையில், அம்மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

அந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்ட நேரு, அசாம் மக்களின் சந்தேகத்தைப் போக்கக்கூடிய வகையில் பேசியிருப்பார் என்றுதான் எவரும் கருதக் கூடும். அவ்வாறு பேசப்படுவதைத்தான் இந்தியப் பிரதமர் போன்ற பொறுப்பான பதவியிலிருப்பவர்களிடம் எதிர்பார்ப்பதும் முறையாகும்.

ஆனால் நேருவோ, வீற்றிருக்கும் பதவிக்கேற்ற பொறுப்புடனும் கடமை உணர்ச்சியுடனும் ஆர்ப்பாட்டம் செய்த அசாம் மக்களிடம் பேச முன்வராமல், எப்பொழுதுமபோல், எதேச்சாதிகார எக்காளமிட்டிருக்கிறார். இப்படி எல்லாம் ஆர்ப்பாட்டம் செய்வதைக் கண்டு அசாம் மக்கள் விருப்பத்திற்கு இணங்கிவிடமாட்டேன் என்றும் எச்சரித்து இருக்கிறார் இந்தியப் பிரதமர்.

"அதிருஷ்டவசமாக அசாமில் எண்ணெய் இருக்கிறது. எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை அசாமிலேயே நிறுவப்படுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்" என்று கூறிய நேரு, 'இவ்வாறு நிறுவப்படுவது நிபுணர்களின் ஆலோசனையைப் பொறுத்திருக்கிறது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அளவுடன் அவர் நின்றிருந்தால், நிபுணர்களின் கருத்தறிந்துதான் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அங்கு நிறுவ முடியும் என்ற அவர் கூற்றில் நாணயமும் நேர்மையும் இருப்பதாக எவரும் ஒப்புக்கொள்ளுவர்.

ஆனால், நேருவோ அவ்வாறு கூறியதுடன் இருந்துவிடாமல், ஆர்ப்பாட்டக்காரர்களோ அல்லது வேறு எவரோ செய்திருப்பதாகக் கூறப்படும் தண்டவாளம் பெயர்த்தல் போன்ற அழிவு வேலையை ஒரு புகலாகக் கொண்டு, "இவ்வாறு மாணவர்கள் நடந்துகொள்வதானல், நிச்சயமாக எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அசாமிற்குக் கிடையாது' எனக்கூறி மிரட்டி இருக்கிறார். இந்த மிரட்டலுக்குப் பொருள் என்ன?

அசாமிற்கு சுத்திகரிப்புத் தொழிற்சாலை இல்லை எனமறுக்கப்படுவதற்குக் காட்டப்படும் காரணம் எதுவானாலும், அது நியாயமானதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், இந்தியப் பிரதமர் நேரு விரும்பினல் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றை அசாமால் பெற முடியும்; அவர் விரும்பவில்லையானால் அத்தொழிற்சாலையை அசாமால் பெறவே முடியாது என்ற பொருளைத்தானே, அவர்பேச்சு எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது?

'நாமே அனைத்தும்—நமது சொல் அனைத்தும் சட்டம்—அதனை எதிர்ப்பவர் படுவர் சங்கடம்' என்ற எதேச்சாதிகார எக்காளமாகத்தானே, இந்தியப் பிரதமர் நேருவின் எச்சரிக்கை அமைந்திருக்கிறது?

எல்லா நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து எண்ணெய் கிடைக்கும் பகுதியான அசாமிலேயே ஒரு சுத்திகரிப்புத் தொழிற்சாலையைத் துவங்குவது இலாபகரமானது என, இந்தியப் பிரதமர் குறிப்பிடும் நிபுணர்கள் கருத்து அறிவித்தாலும், தாம் அவ்வாறு ஒரு தொழிற்சாலையை அசாமில் நிறுவுவது கூடாது எனத் தீர்மானித்துவிட்டால், அந்த முடிவுதான் இறுதியாக நிறைவேற்றப்படும் என்ற உண்மையைத்தான், இந்தியப் பிரதமர் நேருவின் எச்சரிக்கை வலியுறுத்துகிறது.

நிபுணர்கள் கருத்துப்படி குறிப்பிட்ட ஒரு விவகாரம் முடிவு செய்யப்படுகிறது என தாம் கூறிவருவது அனைத்தும், வெறும் பகட்டு, உலக மக்களையும் உள்நாட்டு மக்களையும் ஒரே நேரத்தில் ஏமாற்றப் பேசப்பட்டுவரும் பசப்பு மொழி என்கிற உண்மைதான், இந்தியப் பிரதமர் நேருவின் எதேச்சாதிகார எக்காளத்தின் உள்ளடக்கமாக அமைந்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் நேரு குறிப்பிட்டிருப்பதுபோல், இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களும், தண்டவாளத்தைப் பெயர்த்தவர்களும், இவர் முன்னிலையில் சுத்திகரிப்புத் தொழிற்சாலை வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்தவர்களா' அல்லது அவர்கள் மீது பழி சாரட்டும் என்ற உள்ளெண்ணத்தில் காங்கிரசுக் கனவான்களே செய்தார்களா என்பது இன்னமும் நிச்சயமாகவில்லை. இந்தியப் பிரதமர் கற்பனை செய்து கொள்ளுகிறார், தம்முன் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்தான் அந்த அழிவு வேலையைச் செய்திருக்க முடியும் என்று. போதிய சாட்சியமின்றி தம் விருப்பப்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அழிவு வேலைக் குற்றத்தைச் சுமத்தி, அவ்வாறு ஆகாரமில்லாத குற்றம் சுமததியவரே, ஆர்ப்பாட்டக்காரர்களைத் தண்டிக்கவும் முன்வருகிறார்!

தண்டனையோ, சாதாரணமானதல்ல. அசாம் மக்களின் எதிர்கால நல்வாழ்விற்கே உலை வைப்பதாகும்! நிற்க,

தாம, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது போதியசாட்சியின்றி குற்றஞ்சாட்டி இருப்பதை உண்மையென்றும், அதற்காக அவர் தாவிருக்கும் தண்டனை நிறைவேறக்கூடியதென்றும் வைத்துக்கொண்டால், சுத்திகரிப்புத் தொழிற்சாலை மறுக்கப்பட்டதை அவர்கள் உணர நேர்ந்தால், அங்கிருந்து எண்ணெயை வேறு இடத்திற்குக் கொண்டு செல்லுவதை, அம்மக்கள் அனுமதிப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்க இந்தியப் பிரதமர் மறந்துவிட்டார் என்றே நாம் எண்ணுகிறோம். அவர் சொல்படி தண்டவாளத்தைப் பெயர்க்கவும், இரயில்வே பொருட்களுக்குச் சேதம் விளைவிக்கவும் துணிந்து இருக்கிற மக்கள், எண்ணெய்க் கிணறுகளுக்கு அழிவைத் தேட ஏன் துணியமாட்டார்கள்? இந்தச் சாதாரண நியாயத்தை ஏன் நேரு காணத் தவறிவிடுகிறார்?

நேருவின் எச்சரிக்கை சனநாயகப் பண்பு கொண்டது அல்ல. வெறும் எதேச்சாதிகார எக்காளமாகும்.

அசாம் மக்களின் டில்லி ஆதிபத்திய எதிர்ப்பைக் கண்ட பிறகாவது, இங்குள்ள காங்கிரசுச் சுமைதாங்கிகள் நல்லறிவு பெறுவார்களாக.

'நாங்களே எசமானர்களாயிருப்போம்'

'தேசீய அடிப்படையில் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட முடியாது'

'எல்லா நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் எங்களுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும்'

ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் சுற்றறிக்கை?

"உலகெங்கணுமுள்ள கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு 'வழி காட்டு'கிற—அவைகளை 'நடத்திச் செல்லு'கிற — இயக்குவிக்கிற கட்சியாக ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சிதான் தொடர்ந்து இருந்து வரும்,"

என்று, கிரெம்ளினிலிருந்து, உலகின் எல்லா நாட்டுக் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாக 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற அமெரிக்க இதழ் தெரிவித்திருக்கிறது.

மாஸ்கோவின் ஆதிக்கம் இன்றி—மாஸ்கோவின் தலைமைப் பதவியின்றி சுதந்திரமாக தேசியக் கம்யூனிசம் வளர வழி வேண்டும் என்று மார்ஷல் டிட்டோ அண்மையில் ரஷ்யத் தலைவர்களுடன் பேசிய போது வற்புறுத்தியதாகவும், இதற்கு இணங்க ரஷ்யத் தலைவர்கள் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

எந்த ஒரு நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியும், அது ரஷ்யக் கட்சியுடன் கொண்டுள்ள தொடர்பின் நெருக்கத்தைப் பொறுத்துத்தான் மதிப்பிடப்படும் என்றும், ரஷ்யக் கம்யூனிஸ்டுகள்தான் இதர நாட்டுக் கட்சிகளுக்கு வழி காட்டிகளாக இருப்பர் என்றும், சர்வ தேசியம் என்ற அடிப்படையில்தான் சோஷலிசம் கட்டி வளர்க்கப்பட முடியும் என்றும், தேசிய அடிப்படையில் இதர சோஷலிஸ்டு நாடுகளின் 'தொடர்பு' இன்றி சோஷலிசம் நிர்மாணிக்கப்பட முடியாது என்றும் கிரெம்ளின் சுற்றறிக்கை கூறுகிறதாம்.

உணவுப் பொருள் இறக்குமதி அதிகரிக்கப்படுமாம்

பண வீக்கத்தைத் தடுப்பதும் நோக்கமாம்

புதுடில்லி, அக். 17—

85 இலட்சம் டன் உணவுப் பொருளை இறக்குமதி செய்வது என்று டில்லி சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

முன்பு 60 இலட்சம் டன் மட்டுமே இறக்குமதி செய்வது என்று திட்டமிடப்பட்டிருந்ததாம்; இரண்டாம் திட்ட நகலில் கூட இந்த அளவே குறிக்கப்பட்டிருந்தது. இப்போது, இரண்டாம் திட்டக்காலத்தில் மேலும் 25 இலட்சம் டன் இறக்குமதி செய்வது என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

70 இலட்சம் டன் இறக்குமதிக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன என்றும், இப்போது தேவையான அளவு உணவுப் பொருள்கள் சர்க்காரிடம் கையிருப்பில் இருப்பதாகவும், மேலும் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் வந்த வண்ணமுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இரண்டாம் திட்ட காலத்தில் அபிவிருத்திக்காக ஏராளமான தொகை செலவிட உத்தேசிக்கப்பட்டிருப்பதை ஒட்டி ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிற பணவீக்கத்தைத் தடுக்கும் நோக்குடன்தான், இந்த இறக்குமதித் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் கோதுமை தேவை என்றும், எனவே ஐந்தாண்டுகளுக்கு 25 இலட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பெனிசிலினைவிடச் சிறந்த மருந்து!

லண்டன், அக். 17—

இதுவரை கிருமிகளை நாசப்படுத்துவதற்கு 'பெனிசிலின்' தான் சிறந்தது என்று கருதப்பட்டு வந்தது.

இப்போது அதைவிடச் சிறந்த கிருமிநாசினி மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்; அந்த மருந்துக்குப் பெயர் 'சிக்மா மைசின்' என்பதாகும்.

அந்தக் கட்டிடம்!

சிக்காகோவில் கட்டப்படவிருக்கும் ஒருமைல் உயரக் கட்டிடத்தில் 528 மாடிகள் இருக்கும்; அதாவது உயரம் 5,280 அடி. அதற்குமேல் 480 அடிக் கோபுரம் ஒன்றும் இருக்கும். அதில் 1½ இலட்சம் மக்கள் வசதியாக வேலைசெய்ய முடியும். அதற்கு 10 கோடி டாலர் செலவாகும்

6,60,71,000 பேர்களாம்!

செப்டம்பர் மத்தியில் அமெரிக்காவில் வேலையில் இருந்தோர் தொகை 6,60,71,000 என்று கூறப்பட்டிருக்கிறது.

ரஷ்யா-ஜப்பான் ஒப்பந்தம்

அரசியல் உறவு ஏற்படும்

மாஸ்கோ, அக். 19—

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்குமிடையே உள்ள 'யுத்த நிலைமை'யை நீக்கிவிடுவதென்றும் உடனடியாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திகொள்வதென்றும் இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் வழிகோலப்பட்டுள்ளது.

சோவியத் பிரதமரும் ஜப்பான் பிரதமரும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

உங்களுக்குத் தெரியுமா?

அடுத்த ஆண்டு மே மாதம் மூன்றாவது வாரம் வரையில் தற்போதைய மக்கள்சபை நீடிக்கக்கூடுமாம். கலையப்போகும் பாராளுமன்றமே அடுத்த வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றலாமாம்!

கழகச் செய்திகள்

பம்பாய்—அந்தேரி தி. மு. க. அலுவலகத்திறப்புவிழா

14—10—56 காலை 10 மணிக்கு பம்பாய் அந்தேரி தி. மு. கழக அலுவலகத் திறப்பு விழா தோழர் எஸ். முத்து தலைமையில் நடை பெற்றது. விழாவினைத் தோழர் மதுரைவேலன் துவக்கிவைத்தார். தோழர் எஸ். தியாகராசன் அலுவலகத்தைத் திறந்துவைத்துக் கழகக் கொடியேற்றி சொற்பொழிவாற்றினர். தோழர் கே. வி. கே சாமி உருவப்படத்தைத் தோழர் த. மு. பொற்கோ திறந்துவைத்து உரையாற்றினர். பின்னர் தோழர்கள் இ முத்தையா, அ. செ. செல்வன் ஆகியோர் சிறிது நேரம் பேசிய பின், தோழர் எஸ் தியாகராசன மேற்படி அலுவலகத்திற்கு 'சாமி இல்லம்' எனப் பெயரிட்டார்.

லோயர் பாரளை எஸ்டேட். தி. மு. கழகத் துவக்கம்

14—10—56 மாலை 7 மணிக்கு வால்பாறை வட்டம் லோயர் பாரளை எஸ்டேட்டில், வாசகசாலையில் தோழர் பி. இராமசாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கிளைக் கழகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் செயலாளர்: ந கருப்பண்ணன், துணைச் செயலாளர்: பொன்னுசாமி; பொருளாளர்: பொ சி கன்னியப்பன்; மாவட்டப் பிரதிநிதி: பொ. டி. இராசு செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் ஆர் முத்துசாமி கழக இலட்சியம் குறித்துப் பேசினர்.

சென்னை 35-வது திட்ட தி. மு. கழக ஆண்டுவிழா

2—10—56 மாலை, சூளைமேட்டில், தோழர் கலையழகனுர் தலைமையில் மேற்படி. கிளைக் கழகத்தின் 3-வது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. தோழர்கள் கா வில்லவன், வசந்தை - சம்பந்தம், கோ. செங்குட்டுவன், இளம்பரிதி ஆகியோர் பேசியபின், தோழர் டி. கே. சினிவாசன் அவர்கள், தோழர் கே. வி கே. சாமியின் கழகப் பற்று, செயலாற்றும் திறன், காமராசர் சர்க்காரின் அடிமை ஆட்சியின் அலங்கோலம், இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கைகளிலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக்கூறி, தி. மு கழகம் தேர்தலில் கலந்து கொள்ளவேண்டிய அவசியத்தை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கே. வி. கே சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், வடஎல்லைப் பிரச்சினையைத் தீர்க்க எல்லைக்குழு நியமிக்க வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் கொலாபா தி.மு.க.

10-10-56 இரவு 9-30 மணிக்கு கிளைக் கழக மாதாந்திர உறுப்பினர் கூட்டம், கூபரேஜ் திடலில் தோழர் எ. பி. இ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. கிளைக் கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன தோழர்கள் கே. கே. இராமநாதன் எம். பி. வேல் ஆகியோர் தோழர் சாமி மறைவு குறித்து இரங்கலுரை ஆற்றினர்.

பிறப்பு

ஆமதாபாத் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர், தோழர் இராதணிகாசலம் அவர்களின் துணைவியார் தோழியர் இரஞ்சிதம் அம்மையார், 3-10-56-ல் சென்னை—திருவல்லிக்கேணி பிரசவ விடுதியில் ஆண் மகவொன்றுக்குத் தாயானுர்; தாயும் சேயும் நலம்.

எட்டயபுரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

15—10—56 மாலை பட்டத்து விநாயகர் கோவில் முன், தோழர் ஆ. த. அர்ச்சுனன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். கலிங்கன், தி. இராமசாமி, கே. க முத்து ஆகியோர் சர்க்கார் விசைத்தறித் திணிப்புக் கொள்கையைக் கண்டித்துப் பேசினர். இறுதியில் திரு. சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கொடுவாயூரில் கழகப் பொதுக்கூட்டம்

12—10—56 மாலை 5 மணிக்கு பாலக்காடு கொடுவாயூரில் தோழர் அனிபா தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் வில்வம், தோழியர் அருண்மொழி-வில்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பாலக்காட்டில் கழகப் பொதுக்கூட்டம்

13—10—56 மாலை 6 மணிக்கு பாலக்காட்டில், தி. மு கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் எ. கே வில்வம், தோழியர் அருண்மொழி-வில்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்செந்தூரில் கழகப் பொதுக்கூட்டம்

10—10—56 இரவு 8½ மணிக்கு தேரடி திடலில் தோழர் ஆ நல்லக்கண்ணு தலைமையில் நடைபெற்றக் கழகப்பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. ஆர். பி. மணிமொழியன் கே. கணபதி, ஆ. மு தர்மராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

சாலையூரில் (புதுவை) கழகக் கூட்டம்

18—10—56 மாலை 6 மணிக்கு, புதுவை உழவர்கரை கொம்யூன் சாலையூரில் தோழர் பெ. பெருர் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ச. சிவப்பிரகாசம் சொற்பொழிவாற்றினர். இடையில் ஏற்பட்ட பெருமழையின் காரணமாகக் கூட்டம் நிறுத்தப்பட்டு, சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், ஆசிரமத் தொழிலாளர், ஆலை தொழிலாளர் நிலை குறித்தும், நியாய விலைக் கடைகள் திறக்குமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குரிச்சிலாப்பட்டு தி. மு. க.

14—10—56-ல், தோழர் கே. ஜி. கோவிந்தசாமி தலைமையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கழகப் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் செயலாளர்: கே. சம்பந்தம்; துணைச் செயலாளர்: கே. ஆர். நடேசன்; பொருளாளர்: கே. சண்முகம்; மாவட்டப் பிரதிநிதிகள்: கே எ. வெங்கடராமன், கே. ஜி கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர்கள்: பி. எல். தம்பி. 21 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வேலூர் திராவிடநகர் தி. மு. கழகம்

13—10—56 இரவு 10 மணிக்கு தோழர் கோ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் 4-11-56ல் திராவிட நகர் பகுதியில் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கண்டமானடியில் அண்ணு

கே.வி.கே.சாமி மன்றத்தைத் திறந்துவைத்தார்

15—10—56 மாலை கண்டமானடிக்கு வருகை தந்த அண்ணு அவர்கள், அன்று மாலை 5½ மணி அளவில் கே. வி. கே. சாமி மன்றத்தினைத் திறந்துவைத்தார்.

பின்னர் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்கள் 'மக்கள் கடமையும் தற்கால அரசியலும்' என்ற பொருள்பற்றி அரியதோர் உரை நிகழ்த்தினர்.

காங்கிரசின் அக்கிரம ஆட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக, விருதுநகர் சங்கரலிங்கம் அவர்கள் உண்ணுவிரதமிருந்து உயிர் துறந்ததைச் சுட்டிக் காட்டினர்.

திருமணம் :

அன்று காலை 10 மணி அளவில் தோழர் விநாயகம் — தோழியர் கமலம்மாள் திருமணத்தை அண்ணு அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்கள்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

அண்ணு அவர்கள், தமது தலைமையுரையில் சீர்திருத்தத் திருமணத்தின் முக்கியக் கோட்பாட்டினை விளக்கியும், திருமணங்களில் ஆரிய இனத்தலர் புகுத்தின இழி செயல்களை எடுத்துக் காட்டியும் சொற்பொழிவாற்றினர்.

அக்கூட்டத்தில் அண்ணு அவர்களிடம் விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதிக்கென ரூ. 3 கொடுக்கப்பட்டது — வரப்பெற்றோம்.

பின்னர் அண்ணு அவர்கள் தோழர் ச கோவிந்தசாமி பெண் மகவுக்கு 'தமிழ்ச் செல்வி' என்று பெயர் சூட்டினர்.

பரவை தி. மு. கழகம் (தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்)

17—10—56 இரவு 8 மணி அளவில் கழகப் பணிமனையில் தோழர் மு. பழனிவேலு தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கா. அயோத்தி; துணைச்செயலாளர்: மு பழனிவேலு; பொருளாளர்: ம. பாண்டி; மாவட்டப் பிரதிநிதி: ப கார்மேகம்; திருவள்ளுவர் மருந்துச் சாலை பொறுப்பாளர்: இராசாமணி; அழகிரி நூலகப் பொறுப்பாளர்: கா. அயோத்தி; விளம்பர உறுப்பினர்: சா. பிச்சை. செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொடைக்கானல் நகர தி. மு. கழகம்

16-10-56 இரவு 9½ மணிக்கு, தோழர் சப்பையா இல்லத்தில் தோழர் பி. எ. காதர் தலைமையில் நடைபெற்ற நகரக் கழக உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கே. எஸ். சுப்பையா; துணைச்செயலாளர்: ஐ. எ. ரகீம்; பொருளாளர்: ஜி அம்புரோஸ்; செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

ஆவல்சூரன்பட்டி தி. மு. கழகம்

17—10—56-ல், தோழர் பா. வெங்கடப்பன் தலைமையில் கிளைக் கழக இல்லத்தில் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: பா. வெங்கடப்பன்; துணைச் செயலாளர்: ஒ சு. இராமசாமி; பொருளாளர்: சு. வெங்கடசாமி; மாவட்டப் பிரதிநிதி: சொ. ரெ. செகநாதன். செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நவம்பர் மாதத்தில் கழகப் பொதுக்கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

மேல்மங்கலம் தி. மு. க.

15—10—56 இரவு 9½ மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் எம். ஜி சாமி தலைமையில் நடைபெற்றக் கழக உறுப்பினர் கூட்டத்தில், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர், மாவட்டப் பிரதிநிதி: சேது இராசரத்தினம்; துணைச் செயலாளர்: கு சி. குறள்தாசன்; பொருளாளர்: தா. பாண்டியன்; விளம்பரக் குழுத் தலைவர்: பீம்சிங் பரமசிவம். ஐந்து பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உண்ணுவிரதம் கைவிடப்பட்டது

புதுவை, அக் 20—

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக புதுவை அரவிந்த ஆசிரமத் தொழிலாளர் ஆறுபேர், அந்த ஆசிரமத்தின் முன்னர் உண்ணுவிரதம் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் கோரிக்கைகளில் புதுவை மாநில சர்க்கார் தலையிட்டு, அவர்கள் அளித்த உறுதிப்பாட்டின் பேரில், மேற்குறிப்பிட்ட அறுவரும் உண்ணுவிரதத்தை நிறுத்திக் கொண்டுள்ளனர்.

அந்த அறுவரையும் புதுவைத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் ஏற்கனவே சந்தித்து, அவர்கள் கோரிக்கை வெற்றி பெறுவதற்குத் தாம் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறி, உண்ணுவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (ந-நி.)

வெற்றிலைக் கொடிக்காலுக்கு 'மாதிரி'ப் பண்ணை

அரசாங்கம் 'கண்திறந்து விட்டது'?

பொத்தனூர், அக். 20—

இங்குள்ள முக்கியத் தொழிலான வெற்றிலைப் பயிரில், நோய் ஏற்பட்டு கடந்த சில காலமாகத் தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரும் துயருற்றனர்.

கடந்த ஆகஸ்டுத் திங்களில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இவ்வூருக்கு வருகை தந்து, நோயினுல் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால்களைப் பார்வையிட்டு, அந்நோய் எப்படிப் பரவுகிறது என்பதனை வெற்றிலை உற்பத்தியாளர், தொழிலாளர் ஆகியவர்கள் மூலம் கேட்டறிந்தார்.

அன்று மாலை இவ்வூரில் நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசும்போது, இந்நிலையை எடுத்துக் கூறி, "வடநாட்டில் விவசாயப் பயிர்களில் ஏதாவது ஒரு நோய் பரவினுல் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்து ஆராய்ச்சி நடத்திவரும் இந்த சர்க்கார், ஏன் இங்குள்ள வெற்றிலைப் பயிர்களையும் நோய் பரவுதலினின்றும் காப்பாற்ற ஒரு 'மாதிரிப் பண்ணை' அமைத்து, வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்து ஆராய்ச்சி செய்யக் கூடாது?" என்று கேட்டுக் கண்டித்தார்.

அதன் பின்னர், சர்க்கார், இவ்விஷயத்தில் தக்க கவனம் செலுத்தி, 'மாதிரிப் பண்ணை' ஒன்று அமைக்க ரூ. 41,000 ஒதுக்கியிருக்கின்றனர்.

இந்த 'மாதிரிப் பண்ணை' அமைப்பதற்குத் தகுந்த நிலத்தைத் தேர்ந்தெடுக்க சென்னை மாநில விவசாய டைரக்டர், உதவி டைரக்டர், மற்றும் பல விவசாயத் துறை அதிகாரிகளும் இவ்வூருக்கு வந்து நிலத்தைப் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர்.

'மாதிரிப் பண்ணை'யை விரைவிலேயே அமைத்து, விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தருவதாக விவசாய டைரக்டர் உறுதியளித்திருக்கிறர். (ந. - நி.)

பிராவிடண்ட் நிதி சட்டம்

மேலும் பல தொழில்களுக்குப் பரவலாக்கப்படுகிறது

சிப்பந்திகள் பிராவிடண்ட் நிதித் திட்டம் மேற்கொண்டு 17 தொழில்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளது; அச்சகங்கள், தேயிலை, சர்க்கரை, கண்ணுடித் தொழில் ஆகியவை இவைகளில் முக்கியமானவையாகும்.

3,600 தொழிற்சாலைகளில், 20 இலட்சம் தொழிலாளர்கள் இச்சட்டத்தின்கீழ் நன்மை பெறுகின்றனர்.

ஏற்கனவே ஆறு தொழில்களில் அதாவது, சிமெண்ட், சிகரெட், எஞ்சினீயரிங், இரும்பு—உருக்கு, காகிதத் தொழில், துணி ஆலைகளில்—1,354 தொழிற்சாலைகளில்—4,53,896 சிப்பந்திகளுக்கு இத்திட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது; சிப்பந்திகள் செலுத்திய தொகை ரூபாய்க்கு 1 அணுவாகும்; இதே விகிதம் நிர்வாகிகளால் செலுத்தப்பட்டுள்ளது.

அசுவான் அணைக்கட்டு

ரஷ்யா கடன் தருமாம்

புதுடில்லி, அக். 19—

அசுவான் அணைக்கட்டுத் திட்டத்திற்குத் தேவையான பணத்தை நீண்டகாலக் கடனுகத் தர ரஷ்யா சம்மதித்திருப்பதாக எகிப்தியத் தலைவர் நாசர், அமெரிக்கப் பத்திரிகை ஒன்றுக்குத் தகவல் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

தான் சீக்கிரமே ரஷ்யா செல்ல விருப்பதாகவும் அவர் தகவல் தந்திருக்கிறர்.

மணலினுல் செங்கல் செய்யும் தொழிற்சாலை

துவங்குவதற்குத் திட்டக் குழு அனுமதித்துவிட்டது

திரு—கொச்சியில் தனியார் நிர்வாகத்தில் மணலினுல் உறுதியான செங்கல் தயார் செய்யும் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு திட்டக்குழு அனுமதி அளித்திருக்கிறது.

ரூ. 11 இலட்சம் முதலீடு செலுத்தவேண்டிவரும் இந்தத் தொழிற்சாலைக்காக மாநில சர்க்காரால் ரூ. 4½ இலட்சம் உதவி செய்யப்படும்.

சேர்த்தலையிலுள்ள மணல் இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்குள்ள தொழிற்சாலைகளில் செங்கலாகத் தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் புதிய தரம், செங்கல் 1000-க்கு ரூ. 50 வீதம் விலை வருமெனத் தெரிகிறது.

பாராட்டத்தக்க பரிசு!

நாகபுரி, அக். 19—

மத்தியப் பிரதேசத்தில் தீண்டாமையை அடியோடு ஒழித்ததற்காக எட்டு கிராமங்களுக்கு ரொக்கமாக ரூ. 12,000 பரிசளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமங்களில், கிணறுகள், குளங்கள், கோவில்கள், சிற்றுண்டிச்சாலைகள், மற்றும் எல்லாப் பொது இடங்களிலும் தாழ்த்தப்பட்டோர் அனுமதிக்கப் படுகின்றனர்.

திருவல்லிக்கேணியில் அண்ணா முழக்கம்

தேர்தல் நிதிக்கு ரூ. 101 தரப்பட்டது

சென்னை, அக். 22—

சென்னை திருவல்லிக்கேணி 41-வது வட்ட தி. மு. கழக முதல் ஆண்டு விழா கடந்த 20-ந் தேதி சனியன்று மாலை 6 மணியளவில் மிகச் சிறப்புற நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தலைமை தாங்கினார்.

ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள்—ஆண்களும் பெண்களுமாகத் திரண்டு வந்து கருத்துரை பெற்றுச் சென்றனர்.

தோழியர் அலமேலு-அப்பாதுரை அவர்கள் சிறிதுநேரம் பேசியதும், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் சிறிது நேரம் நாட்டு நிலைகளை எடுத்துக் கூறினார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டார் :—

"சீராமுலு உண்ணாவிரதமிருந்து உயிர்விட்டதும் ஆந்திராவில் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டது; ஆனால் தமிழகத்தில், சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்ததும் அந்தவித எழுச்சி ஏற்படவில்லை; காரணம், ஆந்திராவில் மக்களுக்கும் — தலைவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது; அவர்களிடை, நாடு, மொழி பற்றி எந்த விதத் தகராறும் இல்லை; ஆனால் தமிழக நிலை அப்படி அல்ல.

"காமராசர் சாதாரண தொண்டராக இருந்தவர்; இன்று தலைவர் நிலைக்கு வளர்ந்துவிட்டிருக்கிறார். அதனால் அவர், மக்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. சங்கரலிங்கனார் போன்ற தொண்டர்களை எறிட்டுப் பார்க்கவும் மறுத்து விட்டிருக்கிறார். மேலும் அவர், 'பழைய காங்கிரசு'க்கும், 'புதிய காங்கிரசு'க்கும் பாலமாக விளங்க நினைப்பவர்! அதனால் தான் போலும், பழைய காங்கிரஸ்காரரான சங்கரலிங்கனாரின் மறைவு அவருக்கு அதிர்ச்சியைத் தரவில்லை!" என்று குறிப்பிட்டார்.

அடுத்து அண்ணா அவர்கள், நீண்ட கையொலிக்கிடையே பேச எழுந்தார். மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் பேராரவாரம் செய்தனர். அண்ணா அவர்களுக்குப் பல்வேறு மன்றங்கள், கழகக் கிளைகள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அண்ணா அவர்கள் நீண்ட நேரம், நாட்டு நிலைகளைக் குறித்தும், சங்கரலிங்கனார் மறைவு குறித்தும், வரப்போகும் பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபடுவது குறித்தும் அரியதோர் கருத்துரை நல்கினார்கள்.

கூட்டத்தில் சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் நிதி

கூட்டத்தில், தி. மு. க. 41-வது வட்டக் கிளையின் சார்பில் தேர்தல் நிதிக்காக ரூ. 101 கொண்ட பணமுடிப்பை அண்ணா அவர்களிடம் தோழியர் அலமேலு அப்பாதுரையார் அவர்கள் தந்தார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. நி)

திருமணம்

மேடையிலேயே, தோழர் கிருஷ்ணன்—தோழியர் பட்டம்மாள் இருவரும் வாழ்க்கைத் துணைவர்களாயினர். மாலை மாற்றிக்கொள்ளும் வினையினை அண்ணா அவர்கள் முன்னின்று நடத்தி திருமணத்தை முடித்து ஆசி கூறினார்கள்.

பெயர் சூட்டல்

பேசத் துவங்குவதற்கு முன்னால் அண்ணா அவர்கள், தோழர் நம்பி அவர்களின் ஆண் பிள்ளைக்குக் 'குமரன்' என்றும், தோழர் செல்வராசன் அவர்களது குமாரனுக்கு 'வீரபாண்டியன்' என்றும், தோழர் மதுரையின் ஆண் பிள்ளைக்கு 'அன்பழகன்' என்றும் பெயர் சூட்டி மகிழ்வித்தார்கள்.

இதன் நினைவாக முறையே ரூ. 1—1—3, ரூ. 1, ரூ. 1 என்று ஆக ரூ. 3—1—3 'நம் நாடு' வளர்ச்சிக்கென அன்பளிப்புத் தந்தனர்—நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

மத்திய சர்க்கார் 1955—56-ல் ரூ. 1,17,00 000 பெறுமானமுள்ள கதர்த் துணிகளை வாங்கியிருக்கிறார்கள்; 1954—55-ல் வாங்கிய கதர்த் துணிகளின் மதிப்பு ரூ. 28,78,000 ஆகும்.

'விரிந்த மனம்' கொண்ட காமராசர்!

'எல்லைக் கிளர்ச்சி குறுகிய மனப்பான்மையைக் காட்டுகிறது' என்கிறார்

சேலம், அக். 21—

"சிலர் எல்லைக் கிளர்ச்சியில் தீவிரம் காட்டுகிறார்கள்; இன்னும் 10 ஆண்டுகளில் தமிழ் நாடு பெரிதாகவும் ஆகலாம் — அல்லது சிறிதாகவும் ஆகலாம். இந்தியாவில், மாநிலங்களுக்கு எல்லைக்கோடு நிர்ணயிக்க வேண்டுமெனக் கேட்பதே தவறான வாதமாகும்" என்று முதன் மந்திரி காமராசர், சர்க்கார் ஊழியர் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டாராம்.

"இது போன்ற கிளர்ச்சிகள், குறுகிய மனப்பான்மையையே காட்டுகின்றன" என்றும் அவர் பகர்ந்தாராம்!

60—இலட்சம் டன்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த இரும்புக் கனி ஏற்றுமதியால் கிடைக்கும் பணத்தை டில்லி சர்க்கார், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகப் பயன்படுத்துவார்கள் என்றும், 1960-க்குப் பிறகு ஆண்டுதோறும் 30 இலட்சம் டன் இரும்புக் கனியை இந்தியாவிலிருந்து ஜப்பான் இறக்குமதி செய்து கொள்ள முடியும் என்றும் அவர் கூறினாராம்.

சென்னையில் தமிழர் போர்க்கோலம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதற்கு என்ன அர்த்தம்? இந்தக் காங்கிரஸ் ஆளும் நாட்டில் வாழ்வதைவிடச் சுடுகாடு மேல் என்பது தானே?

இதுவா 'சுதந்திரம்'?

"'சுதந்திரம் கிடைத்துவிட்டது—உரிமைகளைப் பெற்றுவிட்டோம் — ஆட்சிப் பொறுப்பு நம்மவர் கையில் வந்துவிட்டது' என்கிறார்கள். ஆனால் சங்கரலிங்கனாருடைய 12 கோரிக்கைகளில் 2 கோரிக்கைகளை மட்டுமேதான் காமராசர் கவனித்திருக்க முடியுமாம். மற்றக் கோரிக்கைகள் அனைத்தையும் டில்லி சர்க்கார்தான் செய்திருக்க முடியுமாம்—செய்ய வேண்டுமாம். இதற்குப் பெயர்தான் 'சுதந்திரமா'? 'உரிமை வாழ்வா'? 'நமது அரசாங்கமா'?

"இந்த அரசாங்கத்தால் ஆவது ஒன்றுமில்லை; இது அதிகாரமில்லாத அமைச்சரவை! இப்படிப்பட்ட சீர்கேடுகளைக் கொண்டுள்ள காங்கிரஸ் இனியாவது திருந்த வேண்டும்; அது தானாகத் திருந்தாவிட்டால் நாம திருத்த வேண்டும். அந்தப் பெரிய காரியத்தின் ஒரு பகுதிதான், இதுவரை தேர்தலில் கலக்காத தி. மு. கழகம் இப்போது தேர்தலில் போட்டியிடுவது என்று செய்த முடிவாகும்.

"சங்கரலிங்கனார் இப்போது தான் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்று கோரிக்கை எழுப்பினார். ஆனால் அந்தக் காலத்திலேயே தமிழ்க்கடல் மறைமலை அடிகள் தலைமையில் 'கட்டாய இந்தி கூடாது' என்று கண்டித்து, 'தமிழ் நாடு தமிழனுக்காக வேண்டும்' என்றும் வலியுறுத்தியவர்கள் நாம்!

"பாரதியாருக்கு இப்போது மணிமண்டபம் கட்டி, அவரைப் பாராட்டுகிறார்கள்—கொண்டாடுகிறார்கள். அவரோ, 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று பாடினார். அவருக்கு விழா கொண்டாடி என்ன பயன்? — மணிமண்டபம் கட்டி என்னபயன்? இன்றையக் காங்கிரஸ் ஆட்சிக்கு, 'தமிழ் நாடு' என்ற பெயர் கேட்டால், 'இன்பத் தேன்' தான் பாயவில்லை; 'செந்தேள்' கொட்டிய மாதிரியல்லவா அலறுகிறார்கள்?

"அந்தப் பாரதியின் பெயரால் —வ. உ. சி.-யின் பெயரால் — மறைமலை அடிகளின் பெயரால்—திரு.வி.க. பெயரால் இந்த நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க முன் வாருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

வேலூரில் ஈ. வெ. கி. சம்பத்

வேலூர்—வேலப்பாடி 28-வது வட்ட தி. மு. கழக மூன்றுவது ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம, 28—10—56 மாலை 6-மணி அளவில், தோழர் வி. ஜி. இராசரத்தினம் தலைமையில் வேலப்பாடி பாட்டை வீதியில் நடைபெறும். தோழர் ஈ. வெ. கி. சம்பத் சொற்பொழிவாற்றுவார். அன்று காலை கழனிககாட்டுத் தெருவில் அண்ணா படிப்பகம் திறக்கப் படும்.

பிறப்பு

17—10—56 இரவு 10-40-மணியளவில், சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் சோ. செங்குட்டுவன் அவர்களது துணைவியார் தோழியர் பவுன் அம்மையார் ஆண்மகவொன்றைத் தாயானார்.

திருமண அழைப்பு

பேரன்புடையீர்! வணக்கம்.

26—10—56 காலை 9-மணியளவில், திருவீழிமிழலை கீழவீதியிலுள்ள மணமகள் இல்லத்தில், அண்ணா அவர்கள் தலைமையில், தோழியர் பரமேசுவரியை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளவிருக்கிறேன். அதுபோது தாங்கள் வந்திருந்து மணவிழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சேலம்
17—10—56

அன்பன்,
வி. சிவப்பிரகாசம்

எல்லைக் கிளர்ச்சி பற்றி சஞ்சீவ ரெட்டி அவதூறு!

கர்நூல், அக். 20—

"சென்னை, ஆந்திர மாநிலங்களுக்கிடையே சுமுகமான உறவு நீடிக்க வேண்டும் என்பதற்காகவே, ஆந்திர எல்லைக்குள் கிளர்ச்சி செய்யும் தமிழர்களது நடவடிக்கைகளை ஒடுக்காமலிருக்கிறோம்.

"சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதால், அது சர்க்காரின் பலவீனம் என்று கருதப்படக்கூடாது.

"ஆந்திரா—சென்னை எல்லைத் தகராறு சர்க்கார்களால் தீர்க்கப்பட வேண்டியதே தவிர நடுத் தெருக்களில் அல்ல,"

என்று ஆந்திர சட்டசபையில், உதவி முதன்மந்திரிசஞ்சீவ ரெட்டி பேசினாராம்.

"திருத்தணித் தமிழர்களைக் கிளர்ச்சியிலீடுபடுமாறும், சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் சென்னையிலிருந்து வந்து சில தமிழர்கள்—ஒரு எம் எல். ஏ உட்பட—கடந்த மூன்று ஆண்டுகளாகத் தூண்டிக்கொண்டிருக்கின்றனர்; இப்போது அவர்கள் சில சட்டவிரோத நடவடிக்கைகளில், மக்களுக்குத் துன்பம் தரும் வகையில் ஈடுபட்டிருக்கிறார்கள்" என்றும் அவர் அபாண்டம் கூறினாராம்

திருத்தணியில் கைது செய்யப்பட்ட கிளர்ச்சிக்காரர்களைப் போலீசார் கொடுமைப்படுத்துவதாகக் கூறி, அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென என். அரங்கநாத முதலியார் என்ற தமிழ் உறுப்பினர் கோரியபோது தான் மேற்கண்டவாறு பேசினாராம் சஞ்சீவ ரெட்டி.

ம. பொ. சிவஞானம் நிலையை விளக்குகிறார்

"எல்லைக் குழு கிடையாது; மண்டலக் குழு' கவனிக்கும்" என்று பண்டித பந்த் கூறியுள்ளாரல்லவா? அதுபற்றிக் குறிப்பிடுகையில் ம. பொ. சி, 'உடனே மந்திரி சுப்பிரமணியம் டெல்லி சென்று தமிழர் நிலையை விளக்க வேண்டும்; மண்டலக் குழு, தென்னாட்டைப் பொறுத்து நவம்பரில் அமையாது; காரணம், கேரளத்தில் ஜனநாயக சர்க்கார் இல்லை; ஆகவே, குழுவில் கேரளம் பிரதிநிதித்துவம் பெற இயலாது; அடுத்த ஏப்ரல் திங்களில்தான் மண்டலக் குழு அமையும்; ஆகவே, அதுவரை எல்லைத் தகராறை நீடிக்கக் கூடாது; உடனே எல்லைக்குழு அமைத்தே ஆகவேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

★★★★★★★-★★★★★★★★-★★

ஆய்வுக்குழுவினரிடம் தேர்தல் நிதி அளிப்பு

தேர்தல் ஆய்வுக் குழுவினரைச் சந்திக்க வரும் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் ஆங்காங்கு சிறு சிறு தொகைகளை ஆய்வுக்குழுவினரிடம் தந்து வருவதுடன், மேலும் தங்களின் பங்குக்குப் பெரும் நிதி திரட்டித்தர தயங்க மாட்டோம் என்று உறுதியளித்து வருகின்றனர்.

★★★★★★★-★★★★-★★★★★★★

★★★★★★★★★★-★★★-★★★★

திங்களிருமுறை தி. மு. க. ஏடு!

கலைக்கூடம்

(சிவகங்கை)

ஆசிரியர் : கலை அரசு
இணை ஆசிரியர்கள் :
டாக்டர் எம். கருப்பையா,
புலவர் அறிவுடைநம்பி

17—10—56-ல் வரவேண்டிய இதழ் மாற்றத்தாலும் விரிவாலும் 31-10-56-ல் வெளிவரும். தோழர்கள் பொறுத்துக் கொள்ளவும்.

★

இவ்விதழில் எழுதுகிறார்கள்

பேராசிரியர் க. அன்பழகன்
கவிஞர் முடியரசன்
கவிஞர் தமிழண்ணல்
புலவர் அறிவுடைநம்பி
திரு. சிற்பி எம்.ஏ.,

★★★-★★★★-★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

கடலூர் :

மஞ்சை நகர் மைதானத்தில்
23—10—56 மாலை 5 மணிக்கு
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
ஈ. வி. கே. சம்பத்
கே. ஏ. மதியழகன்

★

சென்னை—கிண்டி :

சின்னமலை அருகில்
49-வது வட்ட தி. மு கழகத் திறப்பு விழா
24—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : அ. இராபர்ட்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
கண்ணதாசன்

சங்கரலிங்கனார் நினைவுக் கூட்டம்

23—10—56 மாலை 6 மணிக்கு, சென்னை பத்திரையன் தெருவில் (பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி அருகில்), சங்கரலிங்கனார் மறைவு அனுதாபப் பொதுக் கூட்டம், தோழர் ரெ. பாரி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, டி. வி நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தமிழ் நாடு மருத்துவர் மாநாடு

23-10-56 காலை 9 மணிக்கு சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் தமிழ் நாடு 5-வது மருத்துவர் மாநில மாநாடு திரு. டாக்டர் பி. வரதராசுலு அவர்கள் தலைமையில் நடைபெறும். முதலமைச்சர் காமராசர் மாநாட்டைத் திறந்து வைப்பார். பல பிரமுகர்கள் சொற்பொழிவாற்றுவர்.

தேர்தல் கூட்டம்

24-10-56 காலை 9 மணிக்கு, மாநில மருத்துவர் மத்திய சங்கத் தேர்தல் கூட்டம் திரு சக்ரவர்த்தி ஏகாம்பரம் தலைமையில், சென்னை-பவழக்காரத் தெரு, எண்-38, கலியாண மண்டபத்தில் நடைபெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்.

'மூட்டைப் பூச்சியும் கொசுவும்'

23—10—56 மாலை 6 மணிக்கு, சென்னை எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில், திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள், டாக்டர் ஆர். இராமசாமி தலைமையில் 'மூட்டைப் பூச்சியும் கொசுவும்' என்ற தலைப்பில் உரையாடலை ஆரம்பித்துவைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.